**28.08.2025**

**MCOP.248/2023**

**<u>ம.சா.1. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

விபத்து எப்போது, எந்த தேதியில் விபத்து ஏற்பட்டது என்றால் 29.02.2020ம் தேதி காலை 10.00 மணி இருக்கும். நான் திருத்துறைப்பூண்டியிலிருந்து முத்துப்பேட்டைக்கு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. மேற்படி வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் நானும், எனது கணவரும் சென்றோம். நானும், எனது கணவரும் கடைத்தெருவில் எங்களது இருசக்கர வாகனத்தை நிறுத்தி நின்று கொண்டிருக்கும் போது எங்களுக்கு பின்னால் வந்த 4 சக்கர வாகனமான லாரி எங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. 3ம் எதிர்மனுதாரரின் வாகனமான டாடா ஏசி TN 50 பி 1955 என்ற வாகனம் சாலை விதிகளை அனுசரித்து, சாலையின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த விபத்திற்கும் 3ம் எதிர்மனுதாரர் கண்ணன் என்பவருக்கும், விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாததால் இழப்பீடு தொகை கொடுப்பதற்கு கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரிதான். பின்னால் வந்த TN 57 PE 6167 என்ற அசோக் லேலேண்ட் லாரி தான் விபத்து ஏற்படுத்தியது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரிடம் பணம் பறிக்கும் கெட்ட எண்ணத்தில் தான் இந்த

வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இதனால் இந்த 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.